மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.34/2015

2025–ம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேன்மொழி (Dw2) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.06.03.2025

பி.வா.சா.2

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். நான் 24.08.2024ம் தேதியில் இருந்து மண்டபம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு ரொட்ரிக்கோ என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினார். அழைப்பாணையில் சொல்லப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். தாவா சொத்து மண்டபம் யாதவர் தெருவில் உள்ளது என்பது எனக்கு தெரியும். மண்டபம் யாதவர் தெருவில் புல எண்.240 ஏற்கனவே இருந்தது ஆகும். 1957 செட்டில்மெண்டில் புல எண்.240/1, 240/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டது. புல எண்.240/1ன் விஸ்தீரணம் 12.5 ஏர்ஸ், இடையர் குடியிருப்பு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புல எண்.240/2ன் விஸ்தீரணம் 4.5 ஏர்ஸ், வண்டிப்பாதை, வட்டக்கிணறு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புல எண்.240/1 நத்தம் நிலவரி திட்டத்தில் 11 உட்பிரிவுகளாக பிரித்து நத்தம் மனை என்று வகைப்பாடு செய்யப்பட்டது. அந்தந்த உட்பிரிவில் குடியிருந்தவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. உட்பிரிவு 240/8 என்பது நிலுவை என்று கிராம கணக்கில் உள்ளது. மற்ற உட்பிரிவுகளில் 240/1 நம்பு பிள்ளை பெயரில் உள்ளது நத்தம் பட்டா எண்.1559 ஆகும். 240/3 பட்டா எண்.1538, சி.தில்லைஆறுமுகம் பெயரில் உள்ளது. 240/4 சந்துப்பாதை வகைப்பாடு உள்ளது. 240/5 பட்டா எண்.1277, மு.ராமராஜன் பெயரில் உள்ளது. 240/6 பட்டா எண்.1560, பெ.வேலாண்டி பெயரில் உள்ளது. 240/7 பட்டா எண்.959, வெ.நாகுக்கோனார் பெயரில் உள்ளது. 240/9 பட்டா எண்.1365, வெ.இருளப்பக்கோனார் பெயரில் உள்ளது. 240/10 பட்டா எண்.968, திருமலை பெயரில் உள்ளது. 240/11 பட்டா எண்.1936, முரளி பாலன், மோகன் தாஸ் ஆகியோர் பெயரில் உள்ளது. புல எண்.240/1லிருந்து 240/11 புலவரைபடத்தில் தெற்கு வடக்காக செவ்வக வடிவத்தில் உள்ளது. புல எண்.240/2ல் வண்டிப்பாதையும், வட்டக்கிணறும் ஒழுங்கில்லாமல் செவ்வக, வட்ட வடிவத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் சர்வே

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:28 +0530

எண்.240/2 க்குரிய புலவரைபடமும், நான் கொண்டு வந்துள்ள புலவரைபடம் சர்வே எண்.240/1 முதல் 240/11 வரையுள்ள புலவரைபடத்தில் சர்வே எண்.240/2 ஒன்றாகத்தான் உள்ளது. அந்த **புலவரைபடம் ச.சா.ஆ.1** ஆகும். சர்வே எண்.240/2 மொத்த விஸ்தீரணம் 4.5 ஏர்ஸ் அதாவது 11 செண்ட் ஆகும். பட்டா வழங்கப்பட்டுள்ள அனைவரும் அவரவர் வீடு கட்டி தற்போது குடியிருந்து வருகிறார்கள். சர்வே எண்.240/2 புல வரைபடத்தில் கிழக்கு, மேற்காக 55 அடியும், தெற்கு வடக்காக 45 அடியும் இல்லை கிழக்கு, மேற்காக 9.4 மீட்டர், தென்வடலாக 7.2 மீட்டர் உள்ளது. அதாவது தெற்கு, வடக்காக உத்தேசமாக 22 அடியும், கிழக்கு, மேற்காக உத்தேசமாக 27 அடி இருக்கும். புல எண்.240/2 ல் வண்டிப்பாதையும், வட்டக்கிணறும் தென்கிழக்கில் மாரியம்மன் கோவில் நிரந்தர அமைப்பாக உள்ளது. புல எண்.240/2 ல் மாரியம்மன் கோவிலை சுற்றி வடக்கேயும், கிழக்கேயும், தெற்கேயும் மக்கள் போவதற்கும், வருவதற்கும் மண்டபம் பேரூராட்சி பிவேவர் பிளாக் சாலை அமைத்துள்ளார்கள். அதுசம்பந்தமாக ஏற்பட்டதீர்மானம் எனக்கு தெரியாது. புல எண்.240/2 பிவேவர் சாலை அமைத்து முடிக்கப்பட்டது. பேரூராட்சி எல்லைக்குள் சாலை அமைப்பதற்கு பேரூராட்சிக்கு தான் உரிமை உள்ளது. மற்ற துறைகளிடம் இருந்து பேரூராட்சி அனுமதி வாங்க வேண்டிய தேவையில்லை. அதற்கான நிதியை பேரூராட்சி செயல் அலுவலர் ஒதுக்குவார் என்று எனக்கு தெரியாது. புல எண்.240/2 அரசு புறம்போக்கு வண்டிப்பாதையும், வட்டக்கிணறும் உள்ள பகுதியை எந்த ஒருவரும் கிரையம் வாங்கவோ, கிரையம் கொடுக்கவோ முடியாது. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அதில் கிராம நிர்வாக அலுவலரும், தாசில்தாரும் கையெழுத்திட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மற்ற ஆவணங்களை பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை:–**

நான் மண்டபம் கிராம நிர்வாக அதிகாரியாக 2024 ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறேன். இதற்குமுன்பு நான் மண்டபத்தில் பணியாற்றவில்லை. நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின்பேரில்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அழைப்பாணையில் என்ன என்ன ஆவணங்கள் கொண்டு வர சொன்னார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். பொதுவாக ஒரு இடத்தை பதிவு செய்யும்போது அந்த பத்திரத்துடன் பட்டா மாறுதல் மனுவுடன் தான் தாக்கல் செய்வார்கள் என்றால் சரிதான். பொதுவாக கிரைய பத்திரம் பதிவு செய்யும்போது பட்டா மாறுதல் செய்ய கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அந்த பட்டா மாறுதல் சம்பந்தமாக அனுப்பப்பட்ட மனுவினை பதிவு துறை மூலம் அனுப்பப்பட்ட அந்த மனுவை பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கும், வருவாய் ஆய்வாளருக்கும், கிராம நிர்வாகிக்கும் அனுப்புவார்கள் என்றால் சரிதான். கிரைய பத்திரம் பதிவு

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:33 +0530

செய்யும்போது அதுவுடன் பட்டா மாறுதல் கோரி மனு கட்டணம்செலுத்தி தாக்கல் செய்யப்படவேண்டும் என்று உச்ச உயர்நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் பட்டா மாறுதல் சம்பந்தமாக எங்கள் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து அதில் எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு தகவல் எதுவும் தெரியாது. எனக்கு முன்புள்ள அதிகாரிக்கு வந்தது என்றால் சரிதான். உச்ச உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் வழிகாட்டு நெறிமுறைகள் கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் எவர் ஒருவர் மனு கொடுக்கப்பட்டியிருந்தால் அதனடிப்படையில் வருவாய் துறை அதிகாரிகள் பட்டா வழங்கவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்திருந்தால் முதலில் கிராம நிர்வாக அலுவலர் பரிசோதனை செய்து அவர் கொடுக்கும் தகவலின்படிதான் பட்டா மாறுதல் வட்டாட்சியர் கொடுப்பார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 பட்டா மாறுதல் கோரிய விண்ணப்பம் வாதியின் சகோதரி மூலம் பட்டா மாறுதல் கேட்டு வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16 ஆவணத்தை காண்பித்து வாதியின் சகோதரி பர்வதவர்த்தினி என்பவர் கடந்த 31.12.2013 தேதியிட்டு பதிவு செய்யப்பட்டு பதிவு தபாலில் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. பெறுநர் என்ற முகவரியில் யார் பெயர் குறிபிட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.18 ஆவணமானது வாதியின் சகோதரி பர்வதவர்த்தினி என்பவர் 12.08.2015 ம் தேதி வட்டாட்சியருக்கு பட்டா கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்று அந்த ஆவணத்தை காட்டி கேட்டபோது அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.19 ஆவணமானது கடந்த 21.08.2015 ம் தேதியிட்டு வாதியின் சகோதரி பர்வதவர்த்தினி என்பவர் இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு சர்வே செய்து பட்டா வழங்கியது சம்பந்தமாக விண்ணப்பம் செய்தது சம்பந்தமாக ஆவணத்தை காட்டி கேட்டபோது அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பட்டா கேட்டு மனு தாக்கல் செய்தால் அது சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு குறிப்புகள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பதில் சொல்ல மறுத்துவிட்டார். வட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனு கிராம நிர்வாகிக்கு பரிந்துரைக்கப்பட்டு அது சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டு குறிப்புகளை வட்டாட்சியரிடம் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டும் அந்த காலகட்டத்தில் இருந்த கிராம நிர்வாக அதிகாரி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் 1 ம்பிரதிவாதி அரசு தரப்பு என்பதால் கிடப்பில் போட்டுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளிக்கவருவதற்கு முன்பு 1, 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரிடம் வழக்கு சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்தேன் என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமாக இடத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. நேரில் பார்வையிடாததால் அதன்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:38 +0530

அமைப்பு, அதில் உள்ள அம்சங்கள், அதன் நீள, அகலம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொதுவாக புலப்படத்தில்உள்ள அளவுகளும், சொத்தின் அளவுகளுக்கும் முரண்பாடு இருக்கும் என்றால் சரிதான். அந்த காலத்து பத்திரங்களில் சர்வே எண்கள் இல்லாமலே கிரைய பத்திரம் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். ஆனால் அந்த கிரைய பத்திரத்தில் நான்குமால் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தாவா புலத்தில் நான்குமாலின் அடிப்படையில் தாவா சொத்தின் அளவுகளும், சர்வே எண்ணும் நிர்ணயம் செய்யப்படும் என்றால் நேரில் பார்த்தால்தான் தெரியும். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தைபார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு முன்பு இருந்த அதிகாரிக்கு தெரியும் என்றால் அவர்களை கேட்டால்தான் தெரியும். நீதிமன்றத்தில் இருந்து ஒரு சொத்தை அளக்க ஆணையர் வந்தால் விஏஓக்கும், சர்வேயருக்கும் அறிவிப்பு அனுப்பிவிட்டுதான் வருவார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு அடிப்படையில் விஏஓவும், சர்வேயரும் தாவா இடத்தில் ஆஜர் ஆவார்கள் என்றால் சரிதான். கடந்த 26.02.2022ம்தேதி நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு விஏஓவும், சர்வேயரின் உதவி கொண்டு அதனடிப்படையில் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் வந்தபோது இருந்து விஏஓ, சர்வேயரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் வாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தில் கண்ட நான்குமால்படி சொத்தை அளவீடு செய்தபோது கிரைய பத்திரத்தில் கண்ட சொத்து மண்டபம் குரூப் சர்வேஎண்.240/2ல் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த அறிக்கை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2015ல் தகவல் அறியும்உரிமை சட்டத்தின்மூலமாக மண்டபம் யாதவர் தெருவில் உள்ள சொத்து பொது பாதையாக வட்டாட்சியர் வந்து மண்டபம் பேருராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை என சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக பொது பாதைகளை வருவாய் துறையினர்தான் பேருராட்சிக்கு ஒப்படைப்பார்கள் என்றால் பேருராட்சியே பார்த்து கொள்வார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.30 ஆவணமானது வட்டாட்சியர் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மாரியம்மன்கோவில் என குறிக்கப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 ஆவணம் 1996ல் கொடுக்கப்பட்ட புலவரைபடம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் பாதை என்று மாரியம்மன் கோவில் தெற்கு பக்கத்தில் இருப்பதாக குறிபிடப்பட்டுள்ளது என்றால் புலபடம் விபரம் எனக்கு தெரியாது. நான் எனது முதல்விசாரணயில் சில விசயங்களை 1ம்பிரதிவாதி அரசு தரப்பு என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன்

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.03.06 14:13:44 +0530

என்றால் சரியல்ல. அதனால்தான் நான் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தும் இராமநாதபுரம் வட்டாட்சியரிடம் வாதியின் சகோதரரி பட்டா மாறுதல் சம்பந்தமாக கொடுப்பட்ட பட்டா மாறுதல் மனுவினை பார்த்தும் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக வண்டிப்பாதை எத்தனை அடிக்கு அடி கொடுப்பார்கள் என்றால் அகலம் 10, 12 அடியில் கொடுப்பார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வண்டிப்பாதை தாவா சொத்தான சர்வே எண்.240/2 அதனோடு இணைந்த 240/1 மற்றும் மாரியம்மன்கோவில் ஆகியவற்றிக்கு தெற்கே உள்ளதாக தாக்கல் செய்துள்ளார் அந்த ஆவணங்களை காட்டினாலும் எனக்கு தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:48 +0530